சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௫.] 1919ஹு ஏப்ரல்மீ [பகுதி ௪.

அடியார் பெருமை.

இது அடியார்களது பெருமை யென விரிந்து பொருள் தரும். முதலில் அடியாராவார் யாரென்றும் பின்னர் அவர் பெருமைஎது என்றும் ஆராய்வாம். சைவசித்தாந்த சாத்திரம் அடியாரிலக்கணங் கூறுங்காலத்து இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய இவை யடைந்தாரையே அடியாரெனக்கூறும். அதாவது: இருவினை யொப்பு எனில், நல்வினையால் வரும் இன்பத்தினையும் தீவினையால்வரும் துன்பத்தினையும் இரண்டையும் ஒன்றாகக்கருதுவதாம். மலபரிபாகமாவது ஆணவமலத்தடிப்பு நீங்கி, யான் எனது என்னும் அகப்பற்றும் புறப்பற்றும் நீங்குதல். அதாவது, மலம் தனது சத்திதேய்தற்குரிய துணைக்காரணங்களெல்லாவற்றோடும் கூடுதலேயாம்.

சத்திநிபாதமாவது அருட்சத்திபதிதல். அதாவது சத்திநிபாதம் என்னும் சொல்லியல்பு சத்தியினது வீழ்ச்சி என்றவாறு. "நி" என்பது ஏற்றமாக என்னும் பொருள் குறித்து நின்றதோர் இடைச்சொல். ஓர் அவைக்களத்தினடுவே ஓர்கல் வந்து வீழுமாயின் அவ்வீழ்ச்சி அவ்வவைக்களத்துள்ளாரை ஆண்டு நின்றும் அகல்விக்கும். அதுபோலச் சத்திநி

பாதம் நிகழ்ந்த அளவே அது அவ்வான்மாவை மனைவிமக்கள் முதலிய தொடர்புடையாரிடத்து ஆசை நீங்கச்செய்து உலகவாழ்க்கையை வெறுத்து உண்மைக்குரவனை நாடி, தேடுமாறு செலுத்துதலின் அவ்வொப்புமைதோன்ற சத்தி நிகழ்ச்சி என்னாது சத்தி வீழ்ச்சி என்று சொல்வது. இதனைச் சிவஞானசுவாமிகள் சரியைமுதல் நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட்டு நிகழ்தற்கு ஏற்பபக்குவமாதற்பொருட்டு மலத்திற்கு அனுகூலமாக நின்று நடாத்திய திரோதான சத்தி மலபரிபாகம் எய்தியவழி அக்கருணை மறமாகிய செய்கைமாறிக் கருணை யெனப்படும் முன்னைப் பராசத்திருபமேயாய் ஆன்மாக்கள் மாட்டுப்பதிதலாகிய சத்திநிபாதமும் சோபானமுறையால் மந்தம் மந்ததரம் தீவிரம் தீவிரதரம் என நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறுவகைப்பட்டு நிகழ்வதால் அச்சத்திநிபாதத்திற்குக் காரணம் மலபரிபாகம் என்பர். என்னை? 'வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க் கியாண்டுமிடும்பையில" என்னும் திருக்குறளின்படி விருப்பு வெறுப்பு அற்றவனாகிய இறைவனது திருவடியை சேர்ந்தார்க்கே எக்காலத்தும் துன்பமில்லை ஆதலால் அவ்வித இறைவனடியைச் சேரவிரும்பும் ஆன்மா விருப்பும்வெறுப்பும் அற்று இருத்தல் வேண்டும். ஆதலால் இருவினையொப்பென்பது முதலில் வேண்டுவதாம். "யானெனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த வுலகம்புகும்" என்றபடி பொன்விலங்கைத் தரிப்பதுபோல் வானுலகத்துச்சென்றும் மீண்டும் பிறப்பினிற் செலுத்தும் இன்பமில்லாத பதவியாகிய தேவ வுலகத்தைக்காட்டிலும் உயர்ந்த உலகமாகிய மோக்ஷ வுலகத்தில் செல்லுதல் வேண்டுமாயில், யான் எனது என்னும் அகமும் புறமுமாகிய பற்றுகள் நீங்கவே வேண்டும். பின்னர் அருள் வடிவினனாகிய அருளாளனது திருவடியை அடைதல் வேண்டுமாயின் அவனது அருட்சத்தி பதிந்தாலன்றி அவனடியை அடைதல் கூடாததாதலால் அருட் சத்தி பதிதலே வேண்டும். இவ்வித லட்சண முடையவரே அடியராவர். இது கருதியன்றோ புண்ணிய வுடலாகிய மானிட வுடல் தாங்கினோர், இருவித அறமாகிய இல்லறம் துறவறங்களுள் 'இல்லற மல்லது நல்லற மன்று' என்றபடி இல்லறம் ஒன்றையே கருதி ஓர் இல்லறக கிழத்தியை மணந்து பெறுவதற்கரிய மக்களைப்பெற்று, விருந்தினரையும் சுற்றத்தாரையும் ஓம்பி, பிறர்மனை நயவாது, இன்சொற்கூறி, அன்புடையராய், பொறையுடன் வாழ்ந்து இம்மையிற் புகழுடையராய் நின்றனராயினும் "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றபடி தாம் இல்லறத்தால் அடையப் பெறும்பயன் சுவர்க்க இன்பமேயன்றி பிறப்பை

அறத்தற்கு எதிராகாது என்று எண்ணித் தம் பொருட்டும், மனைவியர், மக்கள், சுற்றத்தார் விருந்தினர் பொருட்டும் போற்றுகின்ற உடலை வெறுத்து உயிர்க்கு உறுதி தேடுவான் எண்ணி முன்பு தாம்பயின்ற அன்பை அருளாக்கி, எவ்வுயிரையும் தம்முயிராகப் பாவித்து, புலையுங் கொலையுந் தவிர்த்து தவம் நின்று வாய்மை பேசி கூடாவொழுக்கம் நீத்து நிலையாமை உணர்ந்து நீங்காத இயல்புடைய அவாவினை மற்றவைகளிடத்துச் செலுத்தாது நித்தியானந்தமாகிய இறைவனது திருவடியிற் செலுத்தி வாழ்கின்றவர் ஆகின்றனர்

அன்றியும் அடியாராவார், மேற் சொல்லிய லட்சணங்களுடன் பொருந்தியிருத்தலோடு ஆண்டவன் ஒருவன் ஆன்மாக்கள் அவன் அடிமைகள் அவனை அகமும் புறமுமாகத் தெரிசித்தல் வேண்டும் எனவெண்ணிச் சரியை கிரியை யோக ஞானங்களாகிய படிகளில் நின்று சர்வசம்மாரகர்த்தாவே இறைமைக்குணங்கள் எல்லாம் உடைய இறைவன் யென்றுதேர்ந்து அவன் திருவடிப் போதாகிய அருட்சத்தியை அடைய அஞ்செழுத்தை ஓதி சர்வசம்மாரகாரணனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவாலயங்களையும் அவரது அடியவரையும் சிவனாகவே பாவித்து வணங்குவோர் ஆதல் வேண்டும். இவ்விதலட்சணங்களெல்லாம் உடையோர் அறுபான்மும்மை நாயன்மாரும், சந்தானகுரவராகிய நால்வரும், சேந்தனார் முதலிய ஒன்பதின்மரும், பட்டினத்தடிகள் முதலிய பதினோராந்திருமுறையில் சொல்லியவர்களுமேயாவர் இனி இவர் பெருமை கூறவேண்டுமாயின் சமயாசாரிய சுவாமிகளாகிய நால்வர் செய்த அற்புதச் செயல்களும் மற்றைய நாயன்மார்களும் ஏனையோரும் செய்த அற்புதச் செயல்களும் அவர்களது பெருமையை விளக்குவதாகும். இனி ஆசாரிய சுவாமிகள் நால்வரது செயல்களையும் ஏனையோர் செயல்களையும் சுருக்கமாகக் கூறுவோம்.

“பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதுங்
காலனையன்றேவிகாண் கொண்ட—பாலன்
மரணந்தவிர்த்துவும் மற்றவர்க்கு நந்தங்
கரணம் போலல்லா மைகாண்.”

“ஓடஞ்சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனை தாளம் பாலை நெய்த—லேடெதிர்வெப்
பென்புக்குயிர் கொடுத்த லிங்கிவைதா னோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.”

கொல்கரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்தல்
கல்லே மிதப்பாய் கடனீந்தல் — நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசதிறப்பித்த
திருவா ரூராளி செயல்."

"மோகமறுத்திடி னுமுத்தி கொடுப்பதென
வாகமங்கள் சொன்ன அவர் தம்மைத் — தோகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றொண்டன் தொண்டுகளை
யேதாகச் சொல்லே னியான்."

பாய்பரியோனறந்தப் பரமானந்தப்பரனைத்
தூய திருவாய் மலராற் சொற் செய்து — மாயக்
கருவாதையா மறியாவாறு செய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்.

என்னுந் திருச் செய்யுள்களே சமயாசாரிய சுவாமிகளது புகழையும் அற்புதங்களையும் நிலைநாட்டும். அதாவது பசுகரணம் நீங்கப் பெற்று சிவகரணமாகி அருட்டிருமேனிகொண்ட இறைவனது திருவடியையே பற்றுகக் கொண்டு பற்றுடையார் பலர் பிறவிப்பிணியைப் போக்கி முத்தியங் கரையில் சேர்ப்பித்தார்களென்று நாம் அறிகின்றோம். இவ்விதபெருமை வாய்ந்த உண்மை நாயன்மார்கள் எழுந்தருளிய சற்சமயமாகிய சைவசமயத்தில் தோன்றிய ஆன்மாக்களாகிய நாம் அவ்வடியவரது திருவடிச்சுவடுகளைப் பின்பற்றி நில்லாத உலகவாழ்வைத் துறந்து நிலையாகிய இன்பத்தினைப் பெறும் பொருட்டு "ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு" என்றபடி அவனது திருவடியை எக்காலமும் எண்ணி "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்றபடி அறியாமையால் உண்டாகும் பிறப்பென்னுங் கடலைத் தாண்ட தோற்றக் கேடுகளில்லாத செம்பொருளாகிய சிறப்பினையுடைய திருவடிப் புணையை அடைவதற்கு முயற்சிப்போமாக.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதோற்பத்தி

ச. சபாரத்தின முதலியார் எழுதியது.)

தொகுதி - 8 - பகுதி 3 - பக்கம் - 72 - தொடர்ச்சி

அன்றியும் சிவஞானபோதம் தமிழிற் செய்யப்பட்டதோர் முதனூலேயன்றி மொழிபெயர்ப்பன்றென்பது சிவஞானயோகிகள் கருத்தாமாயின் அவர் அஃதோர் மொழிபெயர்ப் பென்னுங் கொள்கையை வலிந்திழுத்துத் தமதுரையுட் புகட்டிவைத்திடார். "உயர்சிவஞானபோதம் உரைத்தோன்" என்றவாக்கியத்துக்கு அந்தவாக்கியப் பொருளைமாத்திரமே எழுதிவிட்டு அப்பாற்சென்றிடுவர். அங்ஙனம் செய்யாது அந்தவாக்கியப் பொருளை விரித்து "சிவஞானபோதம் என்னும்வடநூலை மொழிபெயர்த்து வார்த்திகம் என்னும் பொழிப்புரை செய்தோன்" என்று இங்ஙனம் தமக்கு உடன்பாடல்லாத கொள்கையை வருவித்து விரித்திடமாட்டார்

இன்னமும், தமிழ்ச்சிவஞானபோதத்துக்குச் சமஸ்கிருதநூல் முதனூலன்றென்பது அவர் கருத்தாமாயின், அவர் தாம் செய்த உரைகளின் பலப்பல இடங்களிலே முதனூற்கொள்கையை எடுத்துக்காட்டித் தமது உரைகளைச் சிறப்பித்திருக்கமாட்டார். அவர் முதனூற்கருத்தைப் பெரிதும் எடுத்தாண்டிருப்பதால், அம்முதனூல் ஈசுரவாக்கென்பதும், அதிலிருந்தே தமிழ்நூல் மொழிபெயர்க்கப்பட்டதென்பதும அவருடைய உள்ளத்திற் பதிந்துகிடந்ததோர் உறுதிக்கொள்கையாம் என்பதை ஒருவாற்றானும்மறுத்தல் கூடாது.

(அ). மெய்கண்டநாயனாரால் சிவஞானபோதம் தமிழ்மொழியிற் செய்யப்படுதற்கு வெகுகாலத்துக்கு முன்னிருந்த ஸ்ரீமத் மாணிக்கவாசக

சுவாமிகளுக்கு உபதேசஞ்செய்தருளுமாறு சிவபெருமான் குருவடிவு கொண்டு சென்றபோது தமது திருக்கரத்திலே சிவஞானபோதத்தைத் தாங்கிச் சென்றார் என்று புராணங்கூறுமாதலால் மெய்கண்டார் காலத்துக்குமுன் சிவஞானபோதம் உளதென்பது தெள்ளிதிற்போந்திடும். அந்த நூல் சமஸ்கிருதத்திருக்கமைபற்றியே அதனை மெய்கண்டதேவர் தமிழில் மொழிபெயர்த்தருளினார் எனக.

மாணிக்கவாசகசுவாமிகள் தமிழரேயாதலின், அவருக்கு உபதேசஞ் செய்யுமாறு குருமூர்த்தங்கொண்டு சென்ற இறைவன் திருக்கரத்திருந்த நூலும் தமிழ் நூலாகவே இருந்திருத்தல் வேண்டும் என்று வாதிப்பாரும் சிலருளர். மணிவாசகப் பெருமான் வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லராய் அமைச்சுரிமை பூண்டிருந்தாராதலின், அவருக்கு / வடமொழியுபதேசம் சாலவும் சால்புடைத்தாமென்க. அவர் “ஆகமகலையும் எக்கலையும் கற்றுணர்ந்தார் ஈரெட்டாண்டெல்லைதனில்” என்று புராணங் கூறுவதும் இதனைவலியுறுத்துமாம். தமிழ் மக்களுக்குச் செய்யப்படும் மந்திர தந்திரோபதேசங்கள் இன்னும் சமஸ்கிருதத்திற்கு முன் செய்யப்படுவது உலகப் பிரசித்தி.

(௯. மெய்கண்டார் காலத்திலும் மிகப்பழையதாகிய இரௌரவாகமத்துத் தீக்ஷாவிதிப்படலத்திலே

“பாவநாதிக்ஷயாசைநம் (சுத்தம் கிறுத்துவாயதாவிதி)
சிவஞானபோத சாஸ்திர மதத்யா (பத்யாதி சிந்தனம்)”

(சீடனுக்குப் பாவனாதீக்ஷை செய்து சிவஞான போதத்தைக்கொடுக்க என்று சொல்லப்பட்டிருத்தலால் † சிவஞானபோதம் மெய்கண்டார் காலத்துக்கு பூர்வியதென்பதும், அது சமஸ்கிருத நூலே என்பதும் தெற்றெனப் போந்திடும்.

(௧௦). சமஸ்கிருதத்திலே சிவஞானபோதம் எனப்பெயரியதொரு நூல் இல்லையாயின், அங்ஙனம் ஒரு நூல் சமஸ்கிருதத்தில் இருந்தது என்னும் கொள்கையை நாம் ஒருவாறு சந்தேகிக்கலாம். சமஸ்கிருதநூல் உலகமெல்லாம் அறியப்படி நின்று நிலவும்போது நாம் அதனைச் சந்தேகிப்பது சிறிதும் கூடாதென்க.

---

† காசிவாசி ஸ்ரீ செந்திநாதையர் இயற்றிய சிவஞானபோத வசனாலங்கார தீபபூமிகை. ௯வது பக்கங்காண்க.

1. சமஸ்கிருதநூல் பிற்காலத்திருந்தார் சிலரால் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்றும், அங்ஙனம் மொழிபெயர்க்கப்பட்ட நூலுக்குப் பிராமணர் சிலர் முதன்மை கொடுத்து அதிலிருந்தே தமிழ் நூலை மொழி பெயர்க்கப்பட்டதென்று வாதிக்கலாயினர் என்றும் அந்தரக்கோட்டை கட்டுவாரும் சிலர் உளர். தமிழில் இருந்து சமஸ்கிருத நூல் மொழிபெயர்க்கப்பட்டதென்பது சொன்மாத்திரையால் நிலைபெற்றுவிடமாட்டாது. அதற்குத்தக்க பிரமாணம வேண்டப்படும். சமஸ்கிருதநூல் இன்னகாலத்திலே இன்ன இடத்திலே இன்னாரால் மொழிபெயர்க்கப்பட்டதென்று யாதானுமொருபிரமாணங்கொண்டுதாபித்தல் கூடுமா? அல்லது அக்கொள்கை யாதாமொரு பாரம்பரியத்தால் காணப்படுவதுண்டா? இல்லாதபோது ஆதாரமற்ற ஆரோபங்களிற் காலம் போக்குவதால் சிறிதும் பிரயோசனம் இல்லை எனவிடுக்க.

2. தமிழ்நூல் சமஸ்கிருத நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாயின், அதனைமொழிபெயர்த்த மெய்கண்டவள்ளலார் அவ்வுண்மையைத் தம்மது நூலகத்து எடுத்துச் சொல்லா தொழிவாரா என்பீராயின், நூல்வரலாறு நூற்பாயிரத்தெடுத்துச் சொல்லப்படுவதே தமிழ் நூல்களுக்குரியதோர் பெருவழக்கு. இதுபற்றியே மெய்கண்டநாயனார் தாம் அதனைச் சொல்லாது பாயிரகாரர் அதனைச் சொல்லவைத்தார். * பாயிரத்துக்குரியதோர் செயன்முறையை, சொற் சுருக்கமும் பொருட்பெருக்கமுறச் செய்யப்பட்ட நூலின்கண்ணே நாம் காணாமைபற்றி, எமது மனம் போனவாறு ஆரோபங்களைக் கற்பித்தல் முறையாகாது.

3. வடமொழிச்சிவஞான போதத்திறுதிச்சூத்திரத்திலே, "சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம்வித்யாத்" என்று சிவஞானபோதத்தை வேறுபடுத்தோதி இருத்தலால், அது தமிழ்நூலில் இருந்தெடுத்து மொழிபெயர்க்கப்பட்டதென்பது பெறப்படாதோ எனின், வடமொழி நூல்கண் முடியுமிடத்தெல்லாம் "இங்ஙனமே இந்நூல் முடிந்தது" என்று அந்நூற் பெயரையையும் காட்ட முடிவுரை கூறுவது வழக்காதலால், அம்முடிவுரைகொண்டு அந்நூல் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்பது சிறிதும் போந்திடாதென்க.

---

* மெய்கண்டவள்ளலார் வாக்கெனப்படும் கடைப்பாயிரத்திலே நூல்வரலாறு கூறப்பட்டிருத்தலும் கவனிக்கத்தக்கது.

அன்றியும், தமிழ்ச்சிவஞானபோதம் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதென்று வாதித்தற் பொருட்டாக, அதனைத் தமிழில் இருந்தகரவாக மொழிபெயர்த்து வைத்தவர்கள், தமதுகளவலை யனதிற்காட்டிக் கொடுத்தற்கியைந்ததொரு வாக்கியத்தைத் தமது மொழிபெயர்ப்புட் புகட்டி வைத்தார் என்று சொல்வது சிறிதும் பொருத்தமுடைத்தாகாதெனக.

4. தமிழ்ச்சூத்திரங்களிற்போல வடமொழிச் சூத்திரங்கள் பொருட் சிறப்புற யாக்கப்படாமையால், தமிழ்ச்சூத்திரங்களை வடமொழிச் சூத்திரங்களின் மொழிபெயர்ப்பென்பது கூடாதென்பாரும் சிலருளர். இந்தச்சிறப்புச் சிறப்பின்மைகளை நிச்சயிக்க வல்லார் சிவஞானயோகிகளை யொத்த பேரறிவாளர் அன்றி அரைவித்தை கால்வித்தை கற்றநம்போலி யரல்லெம். அவர்களே முதனூற் சிறப்பைப்பலவாறு வியந்திருக்கும் போது நாமா அச்சிவவாக்கிற் குறைகூறி நிரயத்துக்காளாகவேண்டியது!

5. இனி, இரௌரவாகமம் இந்தக்காலத்தில் கிடைப்பதரிதாதலால், அவ்வாகமத்தில் சிவஞானபோதம் உண்டென்பதை நம்புமாறெங்ஙனம் என்று வினவுவாருஞ்சிலருளர் இரௌரவாகமத்தையும் அதனகத்துச் சிவஞானபோதம் அமைந்து விளங்குதலையும் கண்டமைபற்றியன்றே சிவாக்கிரயோகிகள் முதலிய பெருந்தகையாளர் எல்லாம் அது அந்த ஆகமத்திலே இன்னபடலத்திலே இன்ன அத்தியாயத்திலே உள்ளது என்று விளக்கிப்போந்தார்கள்? இந்தக்காலத்திலே அந்த ஆகமம் கிடையாமை பற்றி, அது கிடைக்கப்பெற்ற ஆப்தர் கூறிய சாக்ஷியத்தை நாம் புறந்தருவதுமரபாகாது. இரௌரவாகமம் இந்தக்காலத்திலே எங்காவது இல்லை என்று நிறுத்த நம்மவர் எவ்வளவு வல்லுநர் என்பது நாம் சொல்லத்தக்கதல்ல. அன்றியும், அவ்வாகமத்தின் பெயர் ஆகமநாமாவலியில் நின்று நிலவுதலால், அந்தப்பெயர் கொண்ட ஆகமம் ஒன்று இருந்ததென்பதை ஒருவரும் மறுப்பது கூடாது. இது கூடாதபோது, சிவஞானபோதம் அதனைச்சார்ந்ததோர் ஞானநூல் என்னும் வழக்கு, அவ்வாகமம் இந்தக்காலத்தில் கிடைப்பதரிதாதல் பற்றி அழிந்துவிடமாட்டாது.

6. வேறுசிலர் இரௌரவாகமத்திலே சிவஞானபோதம் இல்லை என்றும் வாதிக்கத்தலைப்படுவர். இவர்கள் இங்ஙனம் வாதித்தற்கு ஆதாரம் யாதோயாமறிகிலம்! இவர்கள் எங்காவது ஒருபிரதியைக்கண்டு வைத்தத்தால் இங்ஙனம் வாதிப்பாராயினும் இவர்களுடைய வாதம் திரம்பெற

மாட்டாது. ஆகமங்களை எழுதிவைப்பார் எல்லாம் தத்தமக்குவேண்டிய பாகங்களையன்றிப் பூர்த்தியுற எழுதிவைப்பது பெரிதும் இல்லை, இரௌரவாகமத்திலே சிவஞானபோதம் இல்லை என்று சாதிக்கமுயல்வோர் பல திசைகளினுமிருந்து பலபிரதிகளை வரித்து அவற்றுள் ஒன்றிலாவது சிவஞானபோதம் காணப்படாமையைக்காட்டுதல் வேண்டும். அல்லாக்கால் அவர்களுடைய கொள்கை நிலைபெறமாட்டாதென்க. இங்ஙனம் காட்டவல்லார் ஒருவரும் இலராதலால், இரௌரவாகமத்திலே சிவஞானபோதம் உண்டென்னும் வழக்குச் சிறிதாவது தளர்புற்றிடாது. அவ்வழக்கு இப்போது நாமெல்லாம் காணக்கிடக்கும் சமஸ்கிருத சூத்திரங்களால் பெரிது வலியுறுத்தப்படும்.

சிவஞானபோதத்தின் சமஸ்கிருத உற்பத்தியைக் குறித்த பாரம்பரியத்துக்கு அனுகூலமான ஆதாரங்கள் பின்னும் பலவுள. ஆனால் நாமிங்கே காட்டிய ஆதாரங்கள் அமையுமாதலால் இவ்வியாசத்தை இவ்வளவோடு முடிக்கின்றும். இங்கே எடுத்துக்காட்டப்பட்ட நியாயங்கள் ஒரு நியாய சபையின் கண்ணே வாதிக்கப்படுவதுண்டானால், அந்தச்சபைக்குத் தலைமைவகித்த நீதிபதி எங்ஙனம் தீர்ப்பளிப்பன் என்பதை நடுவுநிலை குன்றாத அறிவுடையார் நன்கனுமித்துக் கொள்வர்.

இவ்வியாசத்தை முடிக்குமுன் நாம் நம்மவர்க்குச் சொல்லத்தக்கதொன்றுண்டு. இந்தக்காலத்திலே ஆராய்ச்சிமுறை எனப்படுவதொன்று புதுவதாய்த் தோன்றி எமது பாரம்பரியக்கொள்கைகளுக்குப் பெருங்கேடு செய்கின்றது. அத்தோடு "பழையனவெல்லாம் பிழை, புதியனவெல்லாம் சரி" என்பதோர் மதமும் தலைப்பட்டு நமது நாட்டுக்குப் பெருங் கெடுதி சூழ்வதாயிற்று. நாம் ஆராய்ச்சிமுறையையாவது புதிய கொள்கைகளையாவது இழித்துரைக்கத் தலைப்படவில்லை. ஆனால் ஆராய்ச்சிமுறை எப்படி எடுத்தாளத்தக்கது? புதிய கொள்கைகளைக் கொள்ளுவது எப்போது? பழைய கொள்கைகளைத் தள்ளுவது எப்போது? என்னும் நியதி சிறிதுமின்றி, "ஆராய்ச்சி" என்னும் பெயருண்மறைந்து நின்று, எமக்குப்பிதிரார்ச்சிதமாகக் கிடைத்த ஞானபண்டாரங்களை எல்லாம், அவைகளுடைய பழமை பற்றித் தள்ளிவிட்டு, புதிய கொள்கைகளை அவற்றின் புதுமைபற்றிக் கொள்ளுவதுண்டானால், நம்நிலை என்படும் என்பதை நம்மவர் சற்றே ஊன்றிச்சிந்தித்தல் வேண்டும். பாரம்பரிய ஞானம் சிறிதுமில்லாத மேலைத் தேசவாசிகளைப்பார்த்துவிட்டு, பாரம் பரி

யஞானச் செல்வத்திற் பெருஞ்சிறப்புவாய்ந்தேமாகிய நாமும், அவர்களைப் போலப் பூர்வக்கொள்கைகளை எல்லாம் புறந்தருவதுண்டானால், எமது தமிழ்ச்சாதியும் சைவசமயமும் பாழ்பட்டழிந்திடும் என்பதிற்றடையில்லை. மேலைத்தேசத்தார் மதுமாமிச பக்ஷணஞ் செய்வதைப்பார்த்துவிட்டு நாமும்அங்ஙனம் செய்யத்தலைப்பட்டால், எமதுசாதி அபரபக்கச் சந்திரன்போலத்தேய்ந்திடுவதன்றி ஒருபோதும் விருத்திபெறமாட்டாது. மேலைத்தேசத்தாரிடத்திலே நாம் கற்றற்குரிய பல லௌகிகத்துறைகளுண்டென்பதை நாம் மறுப்பதில்லை. ஆனால் அவர்கள் தமது பாரம் பரியங்களைப் புறங்காண்பதுபோல நாமும் நமது பாரம் பரியங்களைப் புறங்காண்பது, சிறுபிள்ளை தவழ்தலைப்பார்த்துவிட்டு மழவிளங்குமாரனும் தவழ்வதை ஒக்கும். எமது பாரம் பரியத்திலே அனேக விலையுயர்ந்த மாணிக்கங்கள் பொதியப்பெற்றுள்ளன. எமது சாகிய தருமத்துக்குப் பெருந்தாரகமாயுள்ளது எமது பாரம் பரியமேயாம். எமது ஆசார அனுட்டானங்கள், எமது பழக்க வழக்கங்கள் எல்லாம் எமது பாரம் பரியத்தைப் பொறுத்தனவேயாம். இந்தப்பாரம் பரியத்தைப்போக்கிவிட்டு நாம் நாகரிகப் பிரசங்கஞ் செய்வதெல்லாம் அரிசியை வீசிவிட்டு அன்னஞ் சமைக்க முயல்வதை ஒக்கும். எமது பாரம் பரியங்களுட் சிலவற்றுக்கு இப்போது ஆதாரம் புலப்படாதிருக்கலாம். இது கொண்டு நாம் அவற்றைப் புறங்கண்டிடுவது மரபாகாது. நம்முன்னோர் மேலைத்தேசத்தாரது முன்னோரைப்போல் அறிவிற் குறைந்தவரல்லர். அவர் எம்மினும், மேலைத்தேசத்தவர் தம்மினும் பலமடங்கு அறிவிற் சிறந்தவர். அவர்கள் வழியாக எமக்குக் கிடைத்த பாரம் பரியம் ஆதாரமற்றதென்று முடிப்பது சிறிதுங் கூடாது. அந்தப் பாரம் பரியத்தை நாம் கைக்கொண்டொழுகினாலன்றி எமது சாகிய தருமம் நிலை பெறமாட்டாது. இந்த ஒழுக்கமே எமது சாகிய தருமத்துக்கு உயிர்நிலை எனத்தக்கது. யாதொரு பாரம் பரியத்தையாவது ஆராய்ந்து தெளியவேண்டா என்று நாம் சொல்வதில்லை, பாரம் பரியங்களைத் தத்தம்பக்குவத்துக்கியைந்தவாறு நன்றாக ஆராய்ந்து உண்மையைக் காணவேண்டுவது எல்லாருக்கும் கடனேயாகும். தக்கவாறு ஆராய்ச்சி செய்தவிடத்து யாதொரு பாரம்பரியம் தவறிழைந்துளதாகக் காணப்பட்டால், அதனைத் தடையின்றி ஒதுக்கிவிடவே வேண்டும். ஆனால் ஆதாரம் காணாமைபற்றிப் பாரம் பரியங்களை நாம் பழித்துரைக்கத்தலைப்படுவது, கடவுளைக் காணாமைபற்றி அவரைவிசுவசிக்க உடன்படாத நாத்திகர் கொள்கையேபோலநமக்கும் நமது நாட்டுக்கும் பெருங்கேடாய் முடியும் என்பதை நம்மவர் தமது சித்தத்தை ஒடுக்கிச் சிந்தித்தல் வேண்டும்.

மேலைத்தேசத்தார் தாமும் தமக்குள்ளேயாதொரு பாரம் பரியம் நீடித்து நிலைபெறுவதுண்டாயின், அதனைத்தக்கவாறு ஆராய்ந்தன்றி விரைந்துபற்றிவிலக்கிவிடமாட்டார். அவர்கள் புதுவதாக ஒருகொள்கையைக் கொள்ளுமிடத்தும், அதனைப்பிரபல பிரமாணங் கண்டன்றி அங்கிகரிக்கவும் மாட்டார். நம்மவரோ என்றால் தமது பாரம் பரியங்கள் எத்துணைக் காலத் தவாயினும், அவற்றை ஒருசற்றுவது ஆராய்வதின்றி, தங்கள் விருப்புக்கியைய விரைந் தொதுக்கிவிடுவர். புதிய கொள்கைகளைக் கொள்ளுமிடத்து, அக்கொள்கைகளின் புதுமைபற்றி அவற்றின் பெருமோகங் கொண்டு, அவைகள் எவ்வளவு அபத்த மிழைந்தனவாயினும், அவைகளே உண்மை! உண்மை! என்று உரத்து ஓலமிடத்தொடங்கிக் கொண்டார்கள். எமது சாகியநிலை இந்தநிலையில் வந்துவிட்டதாயின், இதன் பின்னர்நிலை என்னுமோ என்பதை நம்மவருட்டலையாயினார் எல்லாம் ஊன்றிச் சிந்திக்கக்கடவர்.

சிவஞான போதத்தின் சமஸ்கிருத உற்பத்தியைக்குறித்த பாரம் பரியம் எமது சாகியத்துக்கும் சமயத்துக்கு முரியதோர் பிரதான கொள்கையாகும். இதனை நாம் இக்காலத்துள்ள சில பிராமணர் மேற்கொண்ட துவேஷத்தால் புறங்கண்டொதுக்கத் துணிவது, சத்துருவுக்குத் துர்ச்சகுனம் கருதித் தனது மூக்கையரிந்தான் செயலையே ஒக்குமென்க. தமிழை இழித்துரைக்கத் தலைப்பட்டு நிற்கும் பார்ப்பன மாக்களது அறியாமையைக்குறித்து நாம் பெரிது கவல்வேமாயினும், அக்கவற்சிபற்றி நாம் நமது சமயத்துக்கு இன்றியமையாப் பெருஞ்சிறப்பினதாயுள்ள சமஸ்கிருதத்தைத்தள்ளிவிடக் கருதுவது மரபாகாது. நாம் நமது செந்தமிழணங்கை உயர்த்திவிடக் கருதி அவளை அமங்கலியாக்கிவிடுவது யுக்தமாகாது. தமிழின் பெருமையை விளக்கக் கருதியே "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்" என்றும், "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை உண்ட பாலனை யழைத்தது மென்பு பெண்ணுருவாக் — கண்டதும் மறைக் கதவினைத்திறந்ததுங் கலைசேர்-தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்சொற்களோசாற்றீர்" என்றும் "பசுந்தமிழேனை மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ" என்றும் கூறிப் போந்தார்கள். இவர்கள் தமிழின் பெருமையை இங்ஙனம் எடுத்துப்பாராட்டினாராயினும், சமஸ்கிருதத்தை ஒரு சிறிதாவது புறங்கண்டிடக் கருதியதில்லை. தமிழும் சமஸ்கிருதமுமாகிய இருபாஷைகளும் தெய்வசம்பந்தமுடையனவேயாம். இது பற்றியே "ஆரியமும்

செந்தமிழுமானுன் கண்டாய்'' என்று ஆளுடைய அரசும், ''ஆரியமுந்தமிழு முடனே சொலிக் காரிகை யாட்குக்கருணை செய்தானே'' என்று திருமூல நாயனுரும் திருவாய்மலர்ந்தருளினர். இந்தப்பெருந்தகையாளரினும் நாம் அதிகம் அறிந்தேம்போல நடிப்பது முறையாகாது. இந்த இரண்டு பாஷைகளின் தெய்வ சம்பந்தத்தைக் குறித்து நாம் எழுத உத்தேசித்திருக்கும் ''பாஷோற் பத்தி'' யில் விளக்குவேமாதலின், இதனை இவ்வளவில் முடிக்கின்றும்.

திருச்சிற்றம்பலம்.

ச. சபாரத்தின முதலியார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பகவத்கீதை.

(ஸ்ரீமான். ச. சபாரத்தின முதலியார் அவர்கள் ஆங்கிலேயத்தில் எழுதிய வியாசத்தின் மொழிபெயர்ப்பு

பகவத்கீதை என்பது குரு க்ஷேத்திரப் போர்க்களத்தே பார்த்தனுக்கும் கண்ணபிரானுக்கும் நிகழ்ந்த சம்வாதமாம். போர் செய்யும் இருதிறத்தாரும் ஒருவர்க் கொருவர் எதிராகப்படை வகுத்து நின்றபோது, பார்த்தன் எதிர்ப்பக்கத்தைப் பார்த்தபோது தனது உறவினர்க்கும் ஆசிரியர்கட்கும் விரோதமாகத்தான் போர்புரியவேண்டுமென்று தெரிந்தனன். தனது பொருட்பற்றுக்காரணமாக அவர்களையெல்லாம் தான் கொல்லவேண்டியதாயிருக்கும் என்ற எண்ணமானது அவனது உள்ளத்தில் அச்சத்தை விளைத்தது. அவன் திடீரென்று எக்கமுற்றுன். சண்டை செய்யமாட்டேனென்றுன். அவ்விதமான எண்ணத்தில் உறுதிகொண்டான். ஆதலால் பார்த்தனைச் சண்டைசெய்யும்படி இணக்கத்தக்க உபாயத்தைநாடி கண்ணபிரான் பகவத்கீதை என்னும் சம்வாதத்தைத் தொடங்கினர்.

இந்தச்சம்வாதத்தில் ஒவ்வொருமனிதனும் தனது கடமையை காமியங் கருதாது செய்யவேண்டியது முக்கிய மென்னும் கருத்தினைப் பார்த்தன் உளத்தில் பதிப்பித்தார். அதேகாலத்தில் கடவுளுக்கும் சகத்திற்கும் உள்ள சம்பந்தத்தையும் விளக்கினார். அவ்விளக்கத்தை ஏகாத்மவாதக் கொள்கையுடையார் தங்களுடைய மாயாவாதத்தை நிலைநிறுத்த உபயோகப்படுத்துகின்றார். இப்போது, கண்ணன் விளக்கியவற்றின் உண்மைக் கருத்தை ஆராயப் புகுவேனல்லேன். ஏனென்றால் மகாபாரதத்திலேயே அருச்சுனன் ஆகமநெறியில் தவறாது பின்பற்றினவனென்பதும், ஆகமங்களில் விதித்தவாறே சிவபூஜை செய்வதற்குமுன்பாக ஒருநாளும் ஒன்றும் உட்கொள்ளேன் என்ற சபதமும் செய்திருந்தனன் என்பதும் வெளிப்படை. மாயாவாதக் கொள்கையாகிய பரிணாமவாதத்தையும் அகன்மித்தை வாதத்தையும் அருச்சுனனுக்குக் கண்ணபிரான் போதிக்க எண்ணியிருந்தாரானால் அந்தப்போதனைகளைக் கேட்ட பிறகும் சிவபூஜைபண்ணதாகச் சொல்லமுடியாது. அப்பூஜை செய்வதிலே கண்ணபிரான் பார்த்தனுக்குத்தக்க வுதவிபுரிந்ததாகவும் சொல்லமுடியாது. பகவத்கீதையிலுள்ள போதனையை என்ன நோக்கத்தோடு கண்ணபிரான் செய்தாரென்பதைப் படிப்பவர் கவனிக்க வேண்டுமென்பதே என் கருத்து. அது உண்மை ஞானோபதேசத்தின் பொருட்டா அல்லது பிருகத்பதியார் இந்திரனையும் சுக்கிராச்சாரியர் சூரபன்மனையும் மயக்கஞ் செய்து திருப்பியது போல அருச்சுனனையும் மயக்கி வழிப்படுத்தும் பொருட்டா என்பது ஆராயற்பாலது.

(1) அருச்சுனன் ஞானோபதேசத்திற்குத் தக்க நிலைமையில் இருந்தனனென்பதை கவனிப்போமாக. தன் சொத்து இழந்தமை காரணமாக முழுவதும் துயரமுற்றுக்கொண்டிருந்தனன். அவன் பெரியபடையொன்றுசேர்த்துத் தான் இழந்ததை மீட்பதற்காகப் போர்க்களத்துக்குப் புறப்பட்டுப் போனான். பந்தநிலையில் நிற்கின்ற எந்த அறிவாளனும் எண்ணுகின்றவண்ணமே பொருள் லாபத்திற்காகத் தனது உற்றாரையும் உறவினரையும் கொல்லுதல் கூடாதென்றெண்ணினான். பெரிய போர் முழுவதிலும் தான் பந்தவசப்பட்டிருந்தமைக்குத் தெளிவான குறிகள் காட்டியுள்ளான். வெற்றியடைந்த பிறகும் உலகபாசமுடையவன் செல்வது போலத்தானும் அசேதன உலகவாழ்க்கையை அனுமதித்தனன். இந்நிலைமையில் ஞானோபதேசத்திற்குத்தக்க பாத்திரனாயிருந்தானென்று நாம் சொல்லுதல் கூடுமோ? கண்ணபிரான் அருச்சுனன் எவ்வகையான ஆன்மா என்று

அறிய இயலாதவராயிருந்தாரென்றாவது ஞானகாண்டம் போதித்தது ஒரு தவறு என்றாவது நாம் சொல்லமுடியுமா? இரண்டும் நாம் கூறமுடியாது. நாம் கருதக்கூடிய முடிவுயாதெனில் அருச்சுனனைச் சண்டை செய்யத்தூண்டும் வண்ணம் ஏதாவது கற்பிக்க எண்ணினார் என்பதே. கண்ணன் அருச்சுனனுடைய மனநிலையையும் அறிந்தவர். அம்மனநிலை எவ்வாறு மாறுபடும் என்பதையும் தெரிந்தவரே. ஆதலால் பக்குவப்படாத ஒரு ஆன்மாவுக்குப் போதித்தற் பொருட்டுப் பகவத்கீதையைச் செய்தனர் என்பதன்றி அதுமெய்ம்மையான ஞானோபதேசமாகக் கூறும்இயல்பிற்றல்ல.

(2) அருச்சுனன் அப்போது போர்க்களத்துள்ள தனது உற்றாருறவினரோடு போர்புரிய மாட்டேனென்று மறுத்தது சரியா என்பதைக் கவனிப்பாம். க்ஷத்திரியனுடைய கடமை சண்டைசெய்யவேண்டியதுதான். ஆனால் தனது உற்றாருறவினரைக் கொல்லாமலிருத்தலும் அவன் கடமை அல்லவா? நிஷ்காமியகருமத்தைத் தவறாகப் பொருள் கொள்ளுதல் கூடாது. பயன் கருதாது செய்கின்ற செய்கை நிஷ்காமிய கர்மமாகும். ஆனால் பயனைப்பற்றி ஆலோசனையில்லாமல் செய்யும் செய்கையெல்லாம் நிஷ்காமிய கர்மமாகுமா? ஒரு நாளும் அது ஆகாது. அரசன் கடமை குற்றவாளியைத் தண்டிக்க வேண்டியதுதான். கள்ளன் ஒருவனை அடிகளினால் தண்டிக்கலாம். ஆனால் அத்தண்டனையானது குற்றவாளியின் உயிர்க்கு அபாயம் விளைவிக்குமாயின் கண்ணைமூடிக்கொண்டு அத்தண்டனையை அவன் நிறைவேற்றுதலும் கூடாது. என்னை? குற்றவாளியின் உயிரைப் பாதுகாக்க வேண்டியது அரசனது கடமையே யாதலின் என்க. அவ்வாறே தனது உறவினரை அருச்சுனன் கொல்லமறுத்தது முழுவதும் சரியே. கண்ணன் அக்கடமையை அற்பமாக எண்ணும்படி அவனை மயக்கஞ் செய்ய விரும்பியது விதியின்படி நிகழ்ச்சிகள் நடத்தற்கே.

(3) மூன்றாவது ஆராய்தற்குரியது யாதெனில் நிஷ்காமியகர்மம் செய்பவனுக்கு அதனாலே பயன் இல்லையோ என்பது. தம்மைப்போன்ற மக்கட்கு செய்யும் நன்மையானது கைம்மாறு கருதாது செய்யும் நன்மையே. ஆனால் அவ்விதமாகிய நன்மை கடைசியாக செய்பவனுக்குப் பெரும்பயன் தாராதா? அப்படித் தராவிட்டால் அது தனக்குக் கெடுதிசெய்யும் செய்கையாய், புண்ணியச்செய்கையாகக் கருதப்படாததாய் ஒழியும். கடைசியாகச் செய்பவனுக்கு நன்மை பயப்பதிலே தான் நிஷ்காமியச்செய்கையின் நயம் இருக்கிறது. நேராக யாதொரு பயனையும் நாம் எதிர்பார்க்கக் கூடாது. அதுவும் முக்கியமாக நன்மை யார்க்குச் செய்கிறோமோ அம்மனி

னிடத்தில் எதிர்பார்த்தல் கூடாது. ஆனால் அச்செய்கை பெரிதும் புண்ணியமான தென்றும் அதன் நயம் கடவுள் வாயிலாக நமக்குக் கடைசியாக நன்மை பயப்பதேதானென்றும் முழுநம்பிக்கைகொண்டு அதனைச் செய்தல் வேண்டும். நாம் செய்யும் கருமங்கள் ஏதாவது கெடுதிபயப்பதாயும் வழக்கில் நம்மைக் குறைவுபடுத்துவதாயும் இருந்தால் கைம்மாறு கருதாது செய்யப்பட்டமை கொண்டு அது நிஷ்காமியமாகாது. நாம் பயனை எதிர்பாராதிருக்கலாம். ஆனால் மற்றவர்களுக்கு கெடுதி விளைத்தல் கூடாதென்று நாம் கவனிக்கவேண்டும். பார்த்தனது செய்கையானது அவனது உறவினர்க்குக்கெடுதி விளைவித்திருக்குமாயின் அவன்பயனை எதிர்பார்க்கவில்லை என்னுங்காரணங்கொண்டு தண்டனைக்குத் தப்பித்துக்கொள்ள முடியாது.

அருச்சுனன் தற்போதமிழந்து அதிகாரணமாகத் தன்செய்கைக்கு உத்தரவாதி அல்லாதவனாக இருக்கவில்லை. அவன் கர்மம் செய்வதிலே உந்தப்பட்டான். ஆதலால் அவன் செயலற்றிருக்கும் நிலையை அடைந்தானென்று சொல்லவுங்கூடாது. அவனுக்குக் கர்மம் அவசியமாய் இருக்கும்வரை அவன் வினைப்பயனை அனுபவிக்கவே வேண்டும்.

4 வது ஞானிக்குக் கடமை உண்டா என்பது. கடமை என்பதெல்லாம் சடசம்பந்தமுள்ள இடத்தேதான். ஞானி என்பவன் அதனைக் கடந்தவன் ஆதலால் அவனுக்குக் கடமை யாதொன்றும் கிடையாது. அவன் ஞானநிலை அடைதற்குத்தக்க பாத்திரமாக இருந்திருந்தால் அவனுக்கு ஒரு கடமையைக் கண்ணன் வற்புறுத்தி விதிப்பானேன்? அவன் கடமை விதிக்கு உட்பட்டவனானால் ஞானோபதேசத்திற்குத் தக்கவன் என்று சொல்லுதல்கூடாது. அவன் க்ஷத்திரிய தர்மத்தைப்பின்பற்றிச் சண்டைசெய்ய வேண்டுமென்றால், அவன் பந்தத்துட் பட்டவனாதலால் தன் உறவினரைக் கொல்லுதல் கூடாதென்கிற கடமையையும் அவன் கவனிக்க வேண்டும் என்றுகூறி மறுக்க. ஒரு ஞானி சம்சார பந்தத்துக்குட் பட்டவனல்லன். ஆதலால் அவனுக்கு உற்றார் உறவினர் இல்லை. அவன் செய்யவேண்டிய கடமையும் ஒன்றில்லை. அவன் ஒருகடமையைச்செய்ய கட்டளை பெற்றால் அதனைத்தனது மற்றக்கடனுக்குப் பொருத்தமாகவே செய்யற்பாலன். கண்ணன் இதனை ஆராய்ந்து முடிவுசெய்யாது அருச்சுனனைச் சண்டை செய்விக்கத்தூண்டும் பொருட்டு ஏதாவதொன்றையே சொல்லவிரும்பினார்.

(5) ஆராய்தற்குரிய ஐந்தாவது விஷயம் யாதெனில் நிஷ்காமிய கர்மமென்றால் நமக்கு நன்மைதரும் செய்கையை செய்யாதிருத்தலா வென்னை. மனிதன் தனக்கு உதவிசெய்துகொள்வது அவன் முதல் கடன் அல்லவா? தன்னயம் மாத்திரம் கருதுதல் கூடாது. ஆயின் தனக்கு நன்மைதரும் உதவியை மற்றவருக்கும் செய்யக்கூடாதா? தற்காலத்திலே எண்ணுபவர்கள் மேற்புறமாகவே பொருள்களைப் பார்க்கின்றனர். ஆடம்பரமாத்திரமுடையவைகளினாலே மயங்கி விடுகிறார்கள். அவர்கள் தன்னயமே கருதுதற்கும் தன்னலம் கருதுதற்குமுள்ள வித்தியாசம் அறியாதவர்களாய் மேம்பட்ட ஆன்மாவானவன் தன்னலங்கருதற்கூடாதென்கிறார்கள். இது ஒரு பெரிய தவறு. தற்கொலை செய்பவனினும் பெரியபாவி இல்லை. தனக்கே கடமை செய்யாதவன் மற்றவர்களுக்குத் தன்கடமைசெய்யத் திறமையுடையவனென்று சொல்லமுடியாது. நிஷ்காமிய மென்பது தன்னயமே கருதுவதையும் தனக்கே இகத்தில் லாபம் தேடிக்கொள்வதையும் தடுப்பதற்கே ஏற்பட்டது. விசாலமாகிய நோக்கத்தோடு தன்னலங்கருதுவது எதிர்ப்பதற்காக அது வைக்கப்படவில்லை ஒரு செய்கையினாலே எவ்வாறாகிலும் தன்னலம் அமைவதில்லை என்றால் அது தனக்கே விரோதமான பாவச் செய்கையாம். அதனைப் புண்ணியச்செய்கை யென்றல் கூடாது. அருச்சுனன் தான் செய்த செய்கையின் முடிவையும் கவனியாது தனக்கே கடைசியாக விளையும் பயனையும் கவனியாது அதனைச் செய்ய ஊக்கப்பட்டால் அது குற்றமில்லாத போதனையாகச் சொல்லுதல் கூடாது. தாம் அதற்குக் கூறும் மதிப்பையும் அது பெறுதற்குரியதன்று.

இதுகாறும் கூறியது இதனைவாசிப்பவர் பகவத்கீதையினுடைய போதனையையும் சித்தாந்த சாத்திரத்திற் கூறும் ஞானகாண்டத்தையும் ஒத்துப்பார்த்து அவ்வற்றின் நயங்களைத்தாமே தெரிந்து கொள்ளுதற்பொருட்டேயாம் என்க.

கா. சுப்பிரமணிய பிள்ளை,

M. A., M. L.

———

37

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவலிங்கம்.

பதினெண் புராணங்கள் என்று சொல்லப்பட்ட வியாசரால் செய்யப்பட்ட நூல்களில் சிவலிங்கத்தைப்பற்றிய கதைகள் பலவிதமாகக் காணப்படுகின்றன. அவைகளில் சில ஆபாசக்கதைகளாகவும் பிறமதத்தார்கள் நகையாடற்கேதுவான கதைகளாகவும் இருக்கின்றன. அக்கதைகளை யெல்லாம் அன்பர்கள் அப்புராணங்கள் வாயிலாகவே படித்துத்தெரிந்துகொள்ளக் கடவர்கள். அவ்வகளைத் திருப்பி எழுதவும் என் மனம் ஒருப்படவில்லை,

வியாசரானவர் பாரதகாலத்தவர் என்று எல்லாருக்கும் தெரிந்தவிடயமே. அதாவது இற்றைக்கு 5000 வருடங்களின் முன்னாகும். இவர்காலத்தில் தான் இவர் தமிழ் வேதப்பாகுபாடுகளை ஒட்டி ஆரிய வேதங்களை வகுத்தார். இவருக்குமுன் ஆரிய பாஷையில் நான்கு வேதப்பாகுபாடுகள் இல்லை. ஆரியர்கள் இத்தேசத்திற்கு வரும்போது ஆரிய இருக்கு வேதத்தில் சிலபாகங்களே கொண்டுவந்தார்கள்.

இப்பொழுது இருக்கும் 18 புராணங்களும் வியாசரால் சொல்லப்பட்டதாக ஏற்படுகிறதேயொழிய வேறின்று. 5000 வருடங்களின்முன் உலகம் கிடையாதா? சீவர்கள் கிடையாதா? புராண இதிகாசங்கள் கிடையாதா ? எல்லாமே இருந்தன. வியாசர் அவைகளைப்பார்த்துத்தான் அவைகளைப்போல் ஆரியத்தில் வகுத்துக்கொண்டார். பூர்வம் இருந்தனவெல்லாம் தமிழே. அத்தமிழ்நூல்களை யெல்லாம் வியாசரே அழித்துவிட்டதாகத் தெரிகிறது.

ஆகையால், வியாசரால் சொல்லப்பட்ட புராணங்களில் கூறியகதைகள் உண்மைக்கு மாறுபட்டதாயின் அவை நமக்குப் பிரமாணமல்ல,

வியாசர் காலத்தில் இருந்த திருமூலநாயனாருடைய திருமந்திரம் ஒன்றே நமக்கு ஆரியக்கட்டுபாடுகளை வெள்ளிடைமலைபோல் விளக்க சிறந்த கருவியாயிருக்கின்றது. ஆகையால், சிவலிங்கத்தைபற்றி அவர் என்ன கூறுகிறார் என்று நாம் சித்தாந்தப்படுத்துவதே நம்முடைய முக்கிய நோக்கம்.

அத்திருமூலர் திருமந்திரம் ஒன்றே நம் தமிழ் சித்தாந்தத்தைக் காத்துக்கொண்டிருக்கின்றது. இல்லாவிடில், ஆரியபாஷாநூல்கள் என்றைக்கே வரம்பை அழித்துவிட்டிருக்கும்.

பதி பசு பாச இயல்பினைச் செவ்வனே விளக்குவதற்கு அந்நூலைப் போல தமிழில் வேறு ஒரு நூலும் இல்லையென்றே சொல்லலாம்.

ஆரிய தமிழ்ப்பண்டிதர்கள் மற்ற நூல்களைத் திருத்தியும், புகுக்கியும், சேர்த்தும், கழித்தும் கெடுத்ததுபோல் இத்திருமந்திரத்தைக் கெடுப்பதற்கு வழியில்லாமற் போய்விட்டது. ஏனென்றால், திருமந்திரப்பாட்டுக்களெல்லாம் பெரும்பாலும் சூனிய சம்பாஷணையாகவே இருக்கின்றது. அம்மகான் முக்காலமும் தெரிந்தவராகையால் வேணுமென்றே அயமாதிரி பாடிவைத்தார்போல் இருக்கிறது.

இனி நாம் எடுத்துக்கொண்ட விடயத்தை ஆரம்பிப்போம்.

சிவலிங்கம் என்பது சிவ + இலிங்கம் என்னும் இரண்டு வார்த்தைகளால் அமைந்தது.

"சிவலிங்கம்" எனவே "விஷ்ணுலிங்கம்" "பிரமலிங்கம்" என வேறு உளதோ என்று ஒரு ஆசங்கை நிகழலாம். அற்றன்று.

"செந்தாமரை எனவே "வெண்டாமரை" ஒன்று உளது என வேறு பிரித்துக்காட்டவந்த உவமையாகக் கொள்ளலாமா? அல்ல.

பின் என்ன என்றால் "செஞ்ஞாயிறு" என்ற போது வேறுபிரித்துக்காட்டாமல் அதன் குணத்தை மாத்திரம் காட்டுவது போன்றது.

செஞ்ஞாயிறு என்றபோது செம்மையாகிய ஞாயிறு என்று விரிந்தாற்போல் சிவலிங்கம் என்றவிடத்து சிவமாகிய இலிங்கம் என விரிந்தது.

சிவமே இலிங்கமாக இருக்கின்றது என்பது அதனால் போதருகின்றது.

சிவம் என்றால் எல்லாம் வல்ல முழுமுதற் பொருள், எண்குணத்தான், மங்களம, பசுவனேதரி எனப் பலபொருள்படும்.

இலிங்கம் என்பது இல் + இம் + கம் என மூன்று பதங்களால் அமைந்த ஓர் வார்த்தை. இதற்கு மாயையில் ஒடுக்கிப் பின் தோற்றுவித்தல் எனப்பொருள் ஆம்.

Vide "இல்லையெனு மாயையிலிட்டனை" என்றதால் இல் = மாயை (கந்தரனுபூதி.)

"மகரமலமாய் வரும்" என்றதால் ம என்பது மலத்தைக் குறிக்கும்.

கம் = தோற்றம் எனப் பொருள்படும். ஆகையால், இலிங்கம் என்பதற்கு மலத்தால் கட்டுண்ட ஆன்மாக்களை சர்வ சங்காரகாலத்தில் மாயையில் ஒடுக்கிப் பின் தோற்றுவிப்பதற்குக் காரணமாயிருக்கும் உருவம் எனப்பொருளாம்.

இதைவிட்டு வேறு பொருள் விரிப்பது பொருந்தாது.

இலிங்கம் என்பதனைச் சமஸ்கிருத பதமாக்கி லிங் = லயம்; கம் = சித்திரித்தல் எனப்பொருள் செய்வது அவ்வளவு அழகுடைத்தன்று. பொருத்தமும் அல்ல. ஏனென்றால் சமஸ்கிருத பாஷையில் ஆதிப்புத்தகம் என்று சொல்லக்கூடிய "இருக்கு" வேதத்திலேயே "இலிங்கம்" என்றபதமும் "சிவம்" என்றபதமும் கிடையா. இலிங்க வணக்கமும் கிடையாது. அந்தக் காலததில் ஆரியருக்கு இலிங்கத்தைப்பற்றி யாதொரு சங்கதியும் தெரியாது. அவர்களும் அவர்கள் வேதமும் வருவதற்கு முந்தியே தமிழ் நாட்டில் இலிங்கமும் இலிங்கவணக்கமும உண்டு என்றால் இலிங்கம் என்றபதம் சமஸ்கிருதபதமாவதெப்படி? சமஸ்கிருதபதமாய்ப் பொருள் செய்வது பொருந்துமா? என்பதை அன்பர்கள் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டுகிறேன்.

சமஸ்கிருதபாஷையில் இலிங்கம் என்றபதத்திற்கு தாது இருக்கிறதே என்றால் எல்லாப்பாஷைகளிலும் தான் அம்மாதிரி சௌகரியங்கள் இருக்கின்றன. உதாரணமாகப் பாருங்கள்:—

(1) இங்கிலீஷில் (Roll) ரோல் என்ற பதம் இருக்கிறது அதற்குத் தமிழில் உருள் என்ற தாது இருக்கிறது. ஆகையால் உருள் என்ற தாது

விலிருந்துதான் ரோல் வந்ததென்று சொல்லலாமா? யுக்திக்கும் பொருத்தம் தான். ஆனால் சரித்திரம் இடங்கொடுக்கவில்லையே.

(2) பேச்சு என்னும் பதத்திலிருந்து தான் Speech வந்த தென்று சொல்லமுடியுமா? ஆனல் சொல்லுவது பொருத்தந்தான். சரித்திரம் இடம்கொடுக்காதே.

இதேமாதிரி அநேக இங்கிலீஷ் பதங்களுக்குத் தமிழ் மூலங்கள் சொல்லலாம் ஆனல் தமிழிலிருந்து தான் இங்கிலீஷ் பாஷையில் அப்பதங்கள் வந்தன என்று சொல்லமுடியாது. அதுபோல இலிங்கம் என்ற பதத்துக்கு சமஸ்கிருதத்தில் ஒருக்கால் மூலம் இருக்கிறதாக இருந்தாலும் சமஸ்கிருத பதமாகாது. தமிழ்ப்பதமே.

சிவம் என்ற பதமும் அப்படியே. தமிழ்ப்பதந்தவிர வேறில்லை.

இன்னும் இச்சிவலிங்கத்தைப்பற்றிக் காமிகம் முதலிய நமக்குக் கிடைத்தது தமிழ் ஆகமங்களில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றது. நமக்குக் கிடைத்தது 9 ஆகமங்களே தான் என்பதற்கு ஆதாரம்:—

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மிற்றும் பெற்ற
நவவாகம மெங்கள் நந்தி பெற்றனே.

திருமந்திரம்.

(இன்னும் வரும்)

அடிசைகிழார். அ. சிதம்பரனார்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விநாயகப் பிரபாவத்தில் கண்டது.

தூர்வை யாசகப் படலம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

"பிரமமாம் பொருளுனல திலையெனப் பித்தர் போன்மயங்கக்
கிரமமே வதி சனகன்றன் கிறியினைக் கீழ்படுத் தறிந்து
வரைய நீயல பிரமமென்றகன்று நான்மறைவாலானறகாற்
பிரமமேபசி போக்கியகதையருள் சண்பையெம் பெரியோய்"

அளவற்ற வளங்களோடுங் கூடிய மிதிலாபுரி என்னும் பட்டணத்தில் அன்பு, கலையுணர்ச்சி, ஈகை, வலி, வெற்றி, ஒழுக்கம், இல்லற நடை முதலிய எல்லா நன்மைகளையும் தனக்கே உரிமையாகவுடைய சனகமகாராஜனென்னுமோரரசனிருந்தான். அவ்வரசன் அரசியற்றி வருநாளில் ஓர் நாள் நாரதமுனிவர் அரசனிடஞ் சென்றனர். அக்காலத்து அவ்வரசன் அகம் பிரமஞான மேற்கொண்டு அந்நாரத முனிவருக்கு வழிபாடு செய்யாதவனாயிருந்தனன். அதை அம்முனிவர்கண்டு இவ்வரசன் வழிபடாதொழியினும் நாம் ஆசி புகலவேண்டியது கடமையாமென்றெண்ணி அரசனே பகவானுடைய கிருபையாலே சகலபாக்கியங்களும் பெற்றனை எல்லா நன்னடைகளையும் கடைப்பிடித்தனை. ஆதலால் இன்னும் வேண்டியவாறெல்லாம் அப்பகவானளித்தருள வேண்டுமென்று ஆசீர் வதித்தனர். அதை அச்சனகராஜன் கேட்டு நகைத்து, முனிவரே! நீர் பேதஞானம் பேசவந்தீரோ? இதென்ன அறியாமை. இது வரையில் நீர் அறிந்த ஞானம் இதுதானா? வேறே பகவான் இருக்கின்றனனென்றும் அவன்வேண்டிய பாக்கியங்களை அளிப்பனென்றும் பேதப்படுத்திச் சொல்லுவது அறிவில்லாதவர்களல்லவா? அபேதிகளாயிருக்கின்ற ஞானிகள்

இவ்வாறு கூறுவரா? கூறார். யாவையும் கொடுக்கிற பகவானும் அவைகளையேற்று யாவையும் அனுபவிக்கின்ற போகியும், அவைகளைக் குற்றமாக வெறுக்கின்ற யோகியும் நானேயன்றி வேறில்லை என்று அஃமதித்தனன். அதை யம்முனிவர்கேட்டு அறிவற்ற ஜனகராஜனே! நீ பகவான் வேறிலையென்று பேசினை யன்றோ? அப்பகவானுண்டென்பதை நீ நாணங்கொள்ளும்படி தான் உன்னெதிரில் இக்கணமே காட்டுகிறேனென்று அவ்விடத்தினின்றும் நீங்கிக் கவுண்டின்னிய முனிவரிடஞ் சென்றனர். அக்கவுண்டின்னிய முனிவர் நாரதமுனிவரை எதிர்கொண்டு சென்று தீர்க்க தண்டஞ் செய்து அழைத்துவந்து ஓராதனத்திலிருக்கவைத்துப் பல உபசாரங்களோடு பூசனைசெய்து அளவளாவிய சந்தோஷத்துடன் இனிய வார்த்தை யாடினர். பின் நாரத முனிவர் அக்கவுண்டின்னிய முனிவர் பூசிக்கின்ற விநாயகமூர்த்தி சந்நிதானத்திற் சென்று சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, கரத்தில் யாழினை யேந்தி, நரம்புகளைத்தடவி பற்பல விசைகளோடும் அவர் பேரருளைப் பாடித்துதித்து, சுவாமீ! தேவரீர் கிருபையால் ஜனகராஜனுக்குப் பூலோக வரசாட்சியும் போக்கற்கரிய செல்வமும் உண்டாயிருக்கின்றன. அவைகள் தேவரீர் கிருபையாற் கிடைத்தன வென்று சற்றுங்கருதிலன். தேவரீரைப் பரத்துவமென்றும் எண்ணலன். பெரியோர்களைக் கண்டால் வந்தனை வழிபாடுகளும் செய்வதிலன். தன்னையே பரத்துவமாக மதித்து அகங்கரித்திருக்கின்றான். அவைகளைத் தேவரீர் திருமுன்பு விண்ணப்பஞ் கெய்து கொள்ளுமாறு, அடியேன் இங்ஙனம் வந்தனனென்று சொல்லி மீட்டுஞ் சாஷ்டாங்கமாகச் சேவித்து விடைபெற்றுச் சென்றனர். பின்னரவ்விநாயகக் கடவுள் அச்சனகராஜனது பசுஞானத்தைப் போக்கிப் பதிஞானத்தைப் போதித்து ஆட்கொள்ளுமாறு திருவுள்ளங்கொண்டு தொழுநோய் கொண்ட சரீரத்துடன் ஓரந்தணராக வெளிக்கொண்டு, அவ்வரசனுடைய அரண்மனைவாயிலுக்கெதிரிற் சென்று அங்குகாவல் கொண்டிருக்கும் ஏவலாளரைப் பார்த்து யாம் வந்திருக்கின்ற செய்தியை அரசனுக் கறிவிப்பீர்களென்று திருவாய் மலர்ந்தனர். அவர்கள் அவ்வாறே சென்று சேவித்து ஓ சார்வபௌமா! தேவரீரது கடைவாயிலில் தரித்திரத்தால் வருத்தமுறுகின்ற பேர்களை நேற்றுவரை ஒருவரையும் கண்டதில்லை. இத்தினம் ஒருவரைக்கண்டோம். அவர் மகா யோக்கியமுள்ள அந்தணராயும் தொழுநோய் கொண்ட சரீரத்துடன் மிக்க துன்பத்தையும் பசியையுமுடையவராயுமிருக்கின்றா ரென்று சொல்ல, அதை அரசன் கேட்டு, அவ்வேதியரை இவ்விடங்கொண்டு வரக் கடவீரென்று கட்டளை யிட்டனன்.

அவ்வாறே அக்காவலாளர் அவரை அழைத்துக்கொண்டு சென்று அரசனெதிரில் விடுத்தார்கள். யாவரும் அருவருப்புக் கொள்ளத்தக்க சரீரத்தோடிருக்கின்ற அந்தணரை அரசன் பார்த்து உமக்கு யாதுவேண்டி வந்தீரென்று வினவ, அதற்கவ் வினாயகமூர்த்தியாகிய வேதியர் சொல்லுவார் அரசனே! முன்னர் எனது பசினோய் நீங்குமாறு அமுதூட்டல் வேண்டுமென்றனர். உடனே அரசன் தன் குமாரனை யழைத்து இவ்வேதியரது பசி தணியும்படியாக அறுசுவை பதார்த்தங்களோடும் போஜனம் செய்விக்கக்கடவை யென்று கட்டளையிட்டனன். அப்புதல்வன் அதற்கிசைந்து, அந்தணரை உள்ளே அழைத்துக்கொண்டு சென்று வாசனையூட்டிய சலத்தினால் அவரது திருவடியை விளக்கி ஓராதனத்தி லெழுந்தருளச் செய்து சாட்டாங்கமாக வணங்கி, இரண்டுதலை வாழையிலைகளை ஒன்றாகச் சேர்த்து அவைகளில் அன்னங் கறி முதலான யெல்லாவுணவுகளையுங் குறைவற நிரப்பி, சுவாமி! இனித் தேவரீரமுதெடுத்தருளல் வேண்டுமென்று இரந்து அருகில் விசிறியைக் கொண்டு மெல்ல மெல்ல விசிறி உபசரித்தனன் பின்னரவ்வேதியர் இலையிலிட்ட அன்னமும் கறிவகைகளுமா என் பசியைத்தணிவிக்கற்பாலது என்று அவைகளைத்திருக்கரத்தால் தொட்டருளிய மாத்திரத்தில் அருகிலிருந்தவர்கள் அவ்விலைகளிலிட்ட பதார்த்தங்களி லொன்றேனுங் கண்டிலராகி ஆச்சரியமடைந்தார்கள். அரசகுமாரன் உடனே சமையற்காரரை கூவி நீங்கள் சமைத்திருக்கின்ற எல்லாவுண்டிகளையும் கொண்டு வந்துவிடுவீர்களென்ன அவ்வாறே அவர்கள் அளவற்ற பொற்பள்ளயங்களிற் பாகமுழுவது நிறைவேறியிருக்கின்ற பற்பல உணவுகளைக் கொண்டுவந்து படைத்தனர். படைக்குந்தோறும் அவர்கள் நாணும்படி வுடனுக்குடனே வேதியரும் உண்டருளினர். அதைச்சமயற்காரர்கள் நோக்கிக்குறுநகைகொண்டு மீளவுஞ்சென்று பாகமானதும் ஆகாததுமாய மட்கலத்தோடுவைத்திருக்கின்ற உண்டிகளை யெல்லாங் கொண்டுவந்து படைத்தார்கள். அவைகளையுமவ்வாறே வுண்டருளினர். பின்னரவர்கள் அரசகுமாரனை நோக்கி நாங்கள் சமைத்து வைத்திருந்த எல்லா வுணவுகளும் இவ்வொருவருக்கே படைத்தாய்விட்டன, அரைக்கணப்போது பொறுத்திருந்தால் அளவற்ற உண்டிகளைச் சமைத்துக்கொண்டு வருகிறோமென்று சொன்னார்கள். அதை அந்தணராய்வந்த வினாயகக் கடவுள் கேட்டுத் தமது திருமுடியைத் தூக்கி இனி வெந்தபோது என் பசியை விலக்கும் போது விலக்குங்கள். இப்போது வேகாதிருக்கின்றவைகளைக் கொண்டுவந்து விரைவிற் படையுங்களென்று திருவாய் மலர்ந்தனர். அதற்கவ்

வரசகுமரானதிசயித்து இவருக்கு அப்பண்டங்களை அடிக்கடி எடுத்து வந்து படைப்பதினும், அந்தந்தப் பதார்த்தங்கள் யடைத்திருக்கின்ற எல்லாக் களஞ்சியங்களையும் திறந்து விடுவது நலமென்றெண்ணி அவ்விடங்களிலழைத்துக் கொண்டுபோய் அவைகளைத் திறந்து சுவாமீ! இவ்வறைகளிற் புகுந்து உமக்கு வேண்டுவன புசித்தருளுவீரென்று சொன்னான் அவ்வாறே அக்களஞ்சியங்களினும் வடவானலத்தைப் போலப் புகுந்து யாவையும் புசித்தருளினர்.

இன்னும் வரும்.

ஓம் சிவகணேச கந்தப்ப சபையில் ஒருவராகிய,

கி. இராஜு கிராமணியார்,

இராஜவிலாஸ், திருமயிலை

சிவதுவப்ரகாசிகை

சிவஞானபோதம் என்னும் சைவசித்தாந்தப் பிரதான பிரமாண நூற்குத் தஞ்சாவூர். குப்புசாமி ராஜு என்பவர் எழுதின மாயாவாதப்போலி உரையைக்கண்டித்து ஒழிக்கும் மறுப்புரையாகிய ‘ சிவத்துவப் பிரகாசிகை என்னும் இனிய நூலானது ஸ்ரீ மெய்கண்டதேவரது உரைமுகத்துக்கேட்கும் மாணக்கராகிய ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளால் இயற்றப்பட்டு, ஆடூர் சிவப்பிரகாசப் பிள்ளை என்னும் சிவசாரதியாரால் அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அது இருபத்துமூன்று பாரங்கள் அடங்கியது. விலை ரூபா 2.

புத்தகம்கிடைக்குமிடம்.

(1) சமாஜ ஆபீசு.

(2) சிவஞானத்திருத்தளி, செங்கழுநீர்ப்பிள்ளையார் கோவிற்றெரு, சிதம்பரம்.

(3) ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் மடம், சுவாமி சந்நிதித் தெரு, திருநெல்வேலி.